மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 527, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

527—

அம்பாசமுத்திரம் பகுதியில் தென்காசி செல்லும் சாலையை இணைக்க புறவழிச்சாலை அமைத்தல்.

*14408—திரு. ஆர். முருகையா பாண்டியன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சிமன்றப் பகுதியில் தென்காசி செல்லும் சாலையை இணைக்கும் வகையில் புறவழிச்சாலை (பைபாஸ் ரோடு) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை, அம்பாசமுத்திரம் நகரத்திற்கு மிகவும் அவசியமானது, மாற்றுச் சாலை அமைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறோம். அம்பாசமுத்திரம் டவுனுக்குள் வரும்போது, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ரோடு இருக்கிறது. அது குறுகிய ரோடு. அதிலே தென்காசிக்கும், திருநெல்வேலிக்கும் செல்ல வேண்டிய லாரிகள், வாகனங்கள் அனைத்துமே, நகரத்திற்குள் வரும்போது—எதிர் எதிராக வரும்போது, இட வசதி இல்லாத காரணத்தால், பல மணி நேரம் காலதாமதம் ஆகிறது. எனவே, இந்தச் சாலையை வேறு ஒரு பக்கமாக, அதாவது கல்லிடைக்குறிச்சியிலிருந்து, தாமிரபரணி ஆற்றுப்பாலத்திலிருந்து, எரிசலாறு கோயில் வழியாக, மேலப் பாளம் தெரு, பொதுப்பணித்துறை கால்வாய் வழியாக, ரயில்வே ஸ்டேஷனையொட்டி, தென்காசி சாலை வருகிறது. அங்கே கொண்டுபோய் இணைத்தால் இந்தப் போக்குவரத்தை ஓரளவிற்குக் குறைக்கலாம் என நாங்கள் கருதுகிறோம். அப்படி இல்லை என்றாலும்கூட, அம்பாசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் அருகில் இருந்து ஒரு ரோடு, அதாவது காட்டுச்சாலையில் இதற்கு முன்பாக அமைக்கப்பட்ட ஒரு சாதாரண மண் ரோடு இருக்கிறது.

1994 மே 5]

அந்த ரோட்டைக்கூட சரி செய்து கொடுத்தால், தென்காசி ரோட்டிலே செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நகராட்சியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இந்தச் சாலையைச் செய்து தரு வார்களா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் வினாவிலே கொடுத்திருக்கிற இந்தச் சாலை, அம்பாசமுத்திரம்—ஆலங்குளம் மற்றும் அம்பாசமுத்திரம்—தென்காசி சாலையை இணைப்பது பற்றியதாகும். ஏற்கெனவே, அம்பாசமுத்திரம்—ஆலங்குளம் சாலையானது இந்தத் துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதைப்போல, அம்பாசமுத்திரம்—தென்காசி சாலையும், இந்தத் துறையின் சார்பிலே பராமரிக்கப்பட்டு வருகிறது. அது 20 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலை, இது 33 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலை. இது தவிர, இந்த 2 பெரிய மாவட்டச் சாலைகளை இணைக்க, பிரம்மதேசம்—மன்னார் கோயில் என்கிற ஒரு அரசு மாவட்டச் சாலை ஏற்கெனவே இருக்கிறது. அந்தச் சாலை ஒருவழிச் சாலையாக இருக்கிறது. அதிலே போக்குவரத்துச் செறிவு அதிகமாக இல்லாத காரணத்தாலேதான், அதை இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, வாகனப் போக்குவரத்து அலகு 2500-ஐ எட்டுகின்ற போது, பொதுவாக அப்படிப்பட்ட சாலைகளைத்தான் இந்த அரசு கணக்கிலே எடுத்துக்கொண்டு பரிசீலிக்கிறது. ஆகவேதான், மேற்படி பிரம்மதேசம்—மன்னார்கோயில் சாலையில் வாகனப் போக்குவரத்து அலகு 1513 மட்டுமே இருக்கிற காரணத்தால், ஒருவழிப் பாதையாக இருக்கிற அந்தத் தார்ச் சாலையை இருவழிப் பாதையாக இருக்கின்ற தார்ச் சாலையாக மாற்றுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இதுபற்றி அரசினுடைய பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கணக்கு அநேகமாக முன்னாலே எடுக்கப்பட்ட கணக்காக இருக்கலாம் என்று கருதுகிறேன். இப்போது வாகனங்கள் மிகுந்து அதிகமான போக்குவரத்து இருக்கிற காரணத்தால் வருகின்ற காலத்திலேயாவது நிதி நிலைமைக்கு ஏற்ப இந்தச் சாலையை அமைத்துத் தருவார்களா என்பதற்கு மாண்புமிகு அமைச்சரிடமிருந்து உங்கள் வாயிலாக பதிலை எதிர்பார்க்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக பெருவழிச் சாலை அமைப்பதைக் காட்டிலும் ஏற்கெனவே, அந்த பிரம்மதேசம்-

மன்னார்கோயில் சாலையை மேம்படுத்தினாலே போதும் என்று துறை கருதுகிறது. அப்படிச் செய்கின்றபோது துறைக்குச் செலவும் குறைவாக இருக்கும். உறுப்பினருடைய கோரிக்கையும் நிறைவேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தச் சாலையை அகலப்படுத்துவது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 528, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

528—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்குதல்.

*23062—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு, கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக் கல் லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் 75 சதவீதம் விவசாயம் செய்கிறார்கள். முக்கியப் பயிர்களான நெல், கரும்பு, வேர்க்கடலை, பருத்தி, வாழை முதலியவைகளைப் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். விவசாயம் சம்பந்தமான பட்டப்படிப்பு படிக்கவேண்டுமென்றால், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், பவானி, சிதம்பரம் ஆகிய இடங்களுக்குச் சென்று படிக்கவேண்டியிருக்கிறது. அந்த இடங்களுக்குச் சென்று படிக்க எங்கள் மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு மிகவும் சிரமம் உள்ளதால் வசதி உள்ளவர்கள்தான் படிக்க முடிகிறது. நடுத்தர மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று படிப்பதற்கு அவர்களை அனுப்ப முடிவதில்லை. எங்கள் மாவட்ட விவசாய மக்கள் மீது அன்பையும், பாசத்தையும் வைத்துள்ள நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக்